`திருத்துறைப்பூண்டி நகராட்சி

**சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 30.12.2022 வெள்ளிக் கிழமை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திருமதி.பா.கவிதா,எம்.காம்.,**
**தலைவர்,**
**திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்**

<table>
<tr><th rowspan="2">பொருள் எண்</th><th rowspan="2">பொருள்கள் விபரம்</th><th colspan="2">நகர்மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><th>தீர்மானம் எண்</th><th>விபரம்</th></tr>
<tr><td>1</td><td>நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர்-2022 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.</td><td>161</td><td>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>2</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் தெருவிளக்கு இல்லாத பகுதிகளுக்கு புதிதாக தெருவிளக்கு அமைத்திட 15வது நிதிக்குழு திட்டம் 2021-2022-ன்கீழ் 200 எண்ணிக்கையில் கீழ்காணும் விவரப்படியான எல்.இ.டி தெருவிளக்குகள் அமைத்து கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.31115/2021/CFC நாள்.14.10.2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-<br><table><tr><th>வார்டு எண்</th><th>தெருவின் பெயர்</th><th>புதிய மின்கம்பம்</th><th>மின்கம்பம் உள்ளது 1 கம்பி மட்டும்</th><th>தெருவிளக்கு பிட்டிங் மட்டும்</th><th>கூடுதல்</th></tr></table></td><td>162</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | ரைஸ்மில் தெரு, சாய் என்க்ளேவ் நகர், | 3 | 2 | – | 5 | | | |
| | | 2 | வெட்டுக் குளத்தெரு, மடப்புரம் முதல் ஆட்டூர் சாலை வரை, மன்னை சாலை டி.எஸ்.பி ஆபிஸ் பின்புறம், ஜே.கே.ஆர் கார்டன், மடப்புரம் முதல் ஆட்டூர் சாலை | – | 5 | 20 | 25 | | | |
| | | 3 | வலத் தெரு, கச்சேரி ரோடு, அகமுடையர் தெரு | 2 | – | 2 | 4 | | | |
| | | 5 | திருவாரூர் சாலை | – | 4 | – | 4 | | | |
| | | 6 | வடபாதி ஆற்றங்கரை தெரு, அரசலடி தெரு | – | – | 16 | 16 | | | |
| | | 7 | மருத்துவமனை தெரு | 2 | 4 | – | 6 | | | |
| | | 8 | வரதராஜ பெருமாள் கோவில் தெரு, காந்தி முதலியார் நகர் | – | 11 | – | 11 | | | |
| | | 9 | தெற்கு வீதி, வடக்கு வீதி, சன்னதி தெரு, கீழ வீதி | – | 24 | – | 24 | | | |
| | | 10 | அரியலூர் தமிழர் தெரு, மீனாட்சி வாய்க்கால் தெரு, அரியலூர் | – | – | 22 | 22 | | | |
| | | 11 | நாடார் தெரு, நாடார் தெரு ஆற்றங்கரை, கீழத்தெரு, காட்டு நாயக்கன் தெரு | 1 | 3 | 2 | 6 | | | |
| | | 12 | நாகை சாலை | – | – | 1 | 1 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | தேளிக்குளம் பிள்ளையார் கோவில் தெரு, காமராஜர் தெரு, பழைய சந்தை பேட்டை தெரு ஆற்றங்கரை, வாணக் காரத் தெரு | – | 3 | 2 | 5 |
| 15 | சாமியப்பா நகர் விரிவாக்கம், சாமியப்பா நகர் | 3 | 7 | – | 10 |
| 16 | ஆட்டூர் சாலை பழைய எடத் தெரு | 1 | 7 | – | 8 |
| 17 | பெரியநாயகிபுரம், முத்துப்பேட்டை சாலை | 2 | 2 | 5 | 9 |
| 18 | வளையல்காரத் தெரு, வ.உ.சி நகர், முத்துப்பேட்டை சாலை | – | 7 | 4 | 11 |
| 19 | பாரதியார் தெரு, சிங்களாந்தி ரோடு, வேதாரண்யம் சாலை, பாரதியார் தெரு விரிவாக்கம் | 1 | 8 | – | 9 |
| 20 | ரொக்கக் குத்தகை, வேதாரண்யம் சாலை | 1 | 2 | – | 3 |
| 21 | பூண்டு வெளி, சாய் நகர், சிங்களாந்தி | 1 | 5 | 4 | 10 |
| 23 | அண்ணா நகர் | 1 | 4 | 3 | 8 |
| 24 | பாம்பாலம்மன் கோவில் தெரு, கச்சவராயன் திடல், சிங்களாந்தி ஆதிதிராவிடர் தெரு | 3 | – | – | 3 |
| **கூடுதல்** | | **21** | **98** | **81** | **200** |

நிர்வாக அனுமதி பெறப்பட்ட வார்டுகளில் தெருவிளக்குகள் புதிதாக அமைக்க வேண்டிய இடங்களில் மின ்வடம் இல்லாத மின் கம்பங்களில் தேவையான இடங்களில் புதிதாக

<table>
<tr>
<td></td>
<td>மின்வடங்கள் மின் வாரியத்தின் மூலம் அமைப்பதற்கும், மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கேட்பு தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்திடவும், தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் மேற்காணும் விவரப்படி புதிய தெருவிளக்குகள் அமைத்திடவும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. திட்ட நிதியில் அனுமதி பெற்றவுடன் தெருவிளக்கு அமைக்கும் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. புதிய மின் வடம் அமைக்கும் பணிக்கு உரிய கட்டண தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்திட மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br><u>ந.க.எண். 1430/2022/இ1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக இந்நகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூராகவும் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையிலும் உள்ள பகுதிகள் பின்வருமாறு:-<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வார்டுஎண்</th><th>சாலையின்பெயர்</th></tr>
<tr><td>1</td><td>7</td><td>ஆஸ்பத்திரி தெரு</td></tr>
<tr><td>2</td><td>16</td><td>ஆட்டூர் ரோடு</td></tr>
<tr><td>3</td><td>21</td><td>சிங்களாந்தி ரோடு</td></tr>
<tr><td>4</td><td>7</td><td>காலரா தெரு</td></tr>
<tr><td>5</td><td>11</td><td>நாடார் தெரு</td></tr>
<tr><td>6</td><td>9</td><td>பவுண்டடி தெரு</td></tr>
</table>
</td>
<td>163</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 7 | 1 | பால்ராஜ் நகர் |
| 8 | 23 | அண்ணா நகர் |
| 9 | 8 | கழுவமுள்ளி தெரு |
| 10 | 16 | பள்ளிவாசல் தெரு |

மேற்படி, சாலைகளை தற்காலிகமாக சீரமைக்க வேண்டியது அவசியமாகிறது. அந்தந்த வார்டு உறுப்பினர்களின் கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு மேற்காணும் விவரப்படி உள்ள சாலைகளை நிர்வாக நலன் கருதி சீரமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5,00,000/-ல் பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மேற்படி பணியினை பொது நிதியில் மேற்கொள் ளவும், பின்னர் மாவட்ட ஆட்சியரிடம் வெள்ள நிவாரண நிதியில் கோரி பெறவும் மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட பணியின் நடவடிக்கையினை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 1430/2022/இ1**

<table>
<tr>
<td>4</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவு பொறியாளர் அறையின் தரை மற்றும் கழிவறைக்கு செல்லும் பாதையினை தடுத்து பராமரிப்பு பணிகள் செய்யவும் கதவுகள் பராமரித்தல் மற்றும் வர்ணம் பூசும் பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே, நிர்வாக நலன் கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.74000/- த்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலககுறிப்பு:</u> மேற்படி பணியினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><u>ந.க.எண். 1430/2022/இ1</u></td>
<td>164</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>5</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் வார்டு எண்.5, 8, 11, 13, 15 ,17, 19 ஆகிய வார்டுகளில் உள்ள குளங்களை தமிழ்நாடு நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் தூர்வாரி சுத்தம் செய்யும் பணி மேற்கொண்டது. கழிவுகளை சாலைகளின் ஓரங்களில் கொட்டி வைக்கப்பட்டுள்ளதை ஜே.சி.பி மற்றும் டிராக்டர் வாகனத்தின் மூலம் அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள 03.11.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒரு நாள் டிராக்டர் வாடகை ரூ.</th><th>ஒரு மணி நேர ஜே.சி.பி வாடகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.பாலசுப்பிரமணியன், திருத்துறைப்பூண்டி</td><td rowspan="2">94000/-</td><td>3800/-</td><td>900/-</td></tr>
<tr><td>2</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், திருத்துறைப்பூண்டி</td><td>4000/-</td><td>1000/-</td></tr>
</table>
</td>
<td>165</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>திருமதி.எஸ்.விஜயகுமாரி,<br>திருத்துறைப்பூண்டி</td><td></td><td>4100/-</td><td>1150/-</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு:</u>
<br><br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.பால சுப்பிரமணியன், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்த தாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
<br><br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மா.ந.ச.1920 பிரிவு-15ன் கீழ் தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
<br><br>
<u>ந.க.எண்.3049/2022/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>6</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன்கீழ் வார்டு எண்.5 இராமமடத் தெருவில் உள்ள இராமமடக் குளத்தினை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.29.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு கூடுதல் முதன்மை செயலாளர், சென்னை அவர்களின் அரசாணை (நிலை) எண்.(4D)No.18 நாள்.21.10.2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 04.11.2022 ஆம் தேதிய, நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகளின்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, இப்பணிக்கு 22.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<br><br>
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</td><td>ஒப்பந்தப் புள்ளி</td><td>ஒப்பந்தப் புள்ளி</td><td>சதவீதம் குறைவு/</td></tr>
</table>
</td>
<td>166</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>மதிப்பீடு<br>ரூ.</td><td>தொகை<br>ரூ.</td><td>அதிகம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.வி.ஜி.ராஜேந்திரன்,<br>திருத்துறைப்பூண்டி</td><td rowspan="2">2315755.14</td><td>2517536.66</td><td>0.09சதவீதம்<br>அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.பி.கண்ணன்,<br>திருத்துறைப்பூண்டி</td><td>2269441.91</td><td>0.02சதவீதம்<br>குறைவு</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.பி.கண்ணன் ,திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலைக்கான உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>
<u>ந.க.எண்.2942-1/2022/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>7</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன்கீழ் வார்டு எண்.17 முத்துப்பேட்டை சாலையில் உள்ள செக்கடிக் குளத்தினை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.30.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு கூடுதல் முதன்மை செயலாளர், சென்னை அவர்களின் அரசாணை (நிலை) எண்.(4D)No.18 நாள்.21.10.2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 04.11.2022 ஆம் தேதிய, நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகளின்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, இப்பணிக்கு 22.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<br><br>
<table>
<tr><td>வ.<br>எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்<br>மற்றும் முகவரி</td><td>ஒப்பந்தப்புள்<br>ளி மதிப்பீடு</td><td>ஒப்பந்தப்புள்<br>ளி தொகை</td><td>சதவீதம்<br>குறைவு/</td></tr>
</table>
</td>
<td>167</td>
<td>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>ரூ.</td><td>ரூ.</td><td>அதிகம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.வி.ஜி.ராஜேந்திரன்,<br>திருத்துறைப்பூண்டி</td><td rowspan="2">2426045.15</td><td>2374098.68</td><td>0.02சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.பி.கண்ணன்,<br>திருத்துறைப்பூண்டி</td><td>2498940.72</td><td>0.03சதவீதம் அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப் புள்ளி வழங்கியுள்ள திரு.வி.ஜி.ராஜேந்திரன், திருத்துறைப்பூண்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலைக்கான உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.
<u>ந.க.எண்.2942/2022/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>8</td>
<td>
இந்நகராட்சிப் பகுதியில் 1997ம் வருடத்திய தமிழ்நாடு நகர்ப்புற பகுதி கால்நடைகள் மற்றும் பறவைகள் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் 1997 பிரிவு 3, 10, (1), 10(3) மற்றும் 10(4)ன்படி கால்நடைகள் பொது இடங்களில் திரிய விடுவது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு திரிய விடுவதால் போக்குவரத்திற்கு இடையூறும், விபத்துக்களும் ஏற்படுகிறது. எனவே மேற்படி சட்டத்தின்படி இந்நகராட்சிப் பகுதியில் சுற்றித் திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்</td><td>வகை</td><td>அபராத தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>முதல் முறை பிடிக்கப்படும் மாடுகளுக்கு</td><td>1000/-</td></tr>
<tr><td>2.</td><td>இரண்டாம் முறை பிடிக்கப்படும்</td><td>2000/-</td></tr>
</table>
</td>
<td>168</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>மாடுகளுக்கு</td><td></td></tr>
<tr><td>3.</td><td>மூன்றாம் முறை பிடிக்கப்படும் மாடுகளுக்கு</td><td>5000/-</td></tr>
<tr><td>4.</td><td>நான்காவது முறை பிடிக்கப்படும் மாடுகளை</td><td>ஏலம் விடப்படும் (அல்லது) கோசாலைக்கு அனுப்பப்படும்</td></tr>
</table>
மேற்குறிப்பிட்டுள்ளவாறு மாடுகளை பிடித்த 3 தினங்களுக்குள் அபராதம் கட்டி மாடுகளை உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் மேற்படி மாடுகளை பொது ஏலம் விடுவதற்கோ அல்லது அருகிலுள்ள ஏதேனும் கோசாலைகளில் விடுவதற்கோ மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மேற்படி மாடுகளை பிடித்து அதற்கு தீவணம் வாங்குவதற்கும் மற்றும் இதர செலவுகளுக்கும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு:</u>
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாடுகளுக்கு தீவணம் மற்றும் இதர செலவுகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00இலட்சம் தொகையினை இநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.
<u>ந.க.எண். 2573 /2022/எச்1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>9</td>
<td>இந்நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்தவெளி கழிப்பிடம் மற்ற நகரம் (ODF+ ) மற்றும் முழு குப்பையில்லா நகரத்திற்கு மூன்று நட்சத்திர மதிப்பீடு (3 Star Rating) சுய அறிவிப்பு தினசரி தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களில் விளம்பரம் செய்து பொதுமக்களின் ஆட்சேபனையை பெற நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் அறிவுரைகளின்படி செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர், திருவாரூர் அவர்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதற்கு உரிய</td>
<td>169</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>நாளிதழ்களுக்கான பட்டியல் தொகை ரூ.25000/-யினை வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செய்தி மக்கள் தொடர்புதுறை அலுவலர் திருவாரூர் அவர்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதற்கு உரிய தொகையினை வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br><u>ந.க.எண். 127/2020/எச்1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>10</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் குறித்த விளம்பரம் தினகரன் தொழில் மலர் தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டது. அதற்கான கட்டணத் தொகை கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.38,000/-விளம்பர நிறுவனத்திற்கு செலுத்திடவும், இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின்பெயர்</th><th>விளம்பரம் வெளியிடப்பட்ட நாள்</th><th>கட்டணத் தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>தினகரன்</td><td>04.10.2022</td><td>38,000</td></tr>
<tr><td></td><td></td><td>கூடுதல்</td><td>38,000</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம்அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><u>ந.க.எண்.1099/2022/இ1</u></td>
<td>170</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr>
<td>11</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியின் குடிநீர் விநியோக வாகனம் F.C.க்கு விடப்பட்டதால், நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஓட்டுநர் மற்றும் டிராக்டர் வாகனம் வாடகைக்கு அனுப்பிவைக்கும் பணி மேற்கொள்ள 25.11.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>நடை ஒன்றுக்கு டிராக்டர் வாடகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திரு.பி.கண்ணன்,<br>திருத்துறைப்பூண்டி</td><td rowspan="2">ரூ.1,25,000 /-</td><td>ரூ.1,000/-</td></tr>
<tr><td>2</td><td>M/S.மங்கையர்க்கரசி<br>கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,<br>திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.1,100/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
<ol>
<li>வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.பி.கண்ணன், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்த தாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மா.ந.ச.1920 பிரிவு-15ன் கீழ் தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.</li>
</ol>
<u>ந.க.எண்.3166/2022/இ1</u>
</td>
<td>171</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **12** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட அண்ணா நகர் பகுதியில், வசிக்கும் திரு.பி.சண்முகவேல் என்பவர் இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் கற்பகநாதர் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு தொடர்பாக வழக்கு எண் 24729 மூலம் வழக்கு தொடுத்துள்ளார். மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக ஆஜராக வழக்கு நடத்திடவும், வாதிடவும், வழக்கறிஞர் கட்டணமாக ரூ.25,000/-யை செலுத்த சென்னை உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞர் திரு.டி.ரவிச்சந்தர் அவர்கள் கேட்பு அனுப்பியுள்ளார். எனவே, மேற்படி வழக்கறிஞர் கட்டணம் செலுத்த `மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** மேற்காணும் வழக்கறிஞர் கட்டணம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br>**<u>ந.க.எண். 2522/2022/எப்1</u>** | **172** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| **13** | இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றி, விழுப்புரம் நகராட்சியில் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வுபெற்ற திரு.ஜே.எஸ்.அலி என்பவர் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் 32885/2022-ன் மூலம் இந்நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளார். (தணிக்கைப் பத்தி நிலுவை தொடர்பாக) மேற்கண்டுள்ள வழக்கில் இந்நகராட்சி சார்பாக வழக்கு நடத்திட வாதிட சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.டி. ரவிச்சந்தர் அவர்கள் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.25,000/- செலுத்த கேட்பு அனுப்பியுள்ளார். எனவே, மேற்கண்டுள்ள தொகையினை செலுத்த மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **173** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** மேற்காணும் வழக்கறிஞர் கட்டணத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண். 3371/2022/எப்1** | | |
| **14** | 166. திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருத்துறைப் பூண்டி நகராட்சியின் பாகம் எண்.115 முதல் 134 வரையுள்ள மொத்தம் 20 பாகங்களில் உள்ள **17351** வாக்காளர்களின் அடையாள அட்டையுடன் ஆதார் எண் இணைக்கும் பணி 01.08.2022 ஆம் தேதி முதல் நடைப்பெற்று வருகிறது. இந்நிலையில் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண் இணைக்கும் நிகழ்வில் வாக்காளர்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 24.09.2022 ஆம் தேதியன்று நகர் பகுதி முழுவதும் திருத்துறைப்பூண்டி தேவா பப்ளி சிட்டி நிறுவனம் மூலம் ஒலிப்பெருக்கி வாகனத்தில் விளம்பரம் செய்யப்பட்டு அதற்கான செலவினத் தொகை ரூ.2500/- (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கக்கோரி பட்டியல் வரப்பெற்றது. மேற்படி தொகை ரூ.2500/-யை தேவா பப்ளி சிட்டி நிறுவனத்திற்கு வழங்கிட நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தேவா பப்ளிசிட்டி நிறுவனத்திற்கு பொது நிதியிலிருந்து தொகை ரூ.2500/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.2196/2022/அ2**<br>**தீர்மானம் எண் 174 : அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** | **174** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 15 | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் Sustainable Water Security Mission (SuWaSem) திட்டத்தின்கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக் குட்பட்ட கீழ்காணும் விவரப்படி உள்ள 12 இடங்களில் உள்ள பழுதடைந்த ஆழ்துளை கிணறுகளை மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தி நிலத்தடி நீரின் மேம்படுத்தும் பணிக்கு ரூ.2.00இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் மேலாண் இயக்குநர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி கடிதம் எண்.280416/HG Wiring/DLC/SuWaSem/ 2018/(Vol-III) Dt:28.11.2022-ன்படி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணிக்கு மொத்த மதிப்பீடு தொகை ரூ.2.00இலட்சத்தில் SuWaSem நிதியில் ரூ.1.00இலட்சமும், நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.1.00இலட்சமும் சேர்த்து ரூ.2.00மதிப்பீட்டில் கீழ்காணும் விவரப்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>பணிகளின் விபரம்</u>**<br><br>1. கச்சேரி ரோடு (வட்டாட்சியர் அலுவலகம் அருகில்)<br>2. நகராட்சி அலுவலகம் முன்புறம்<br>3. நகராட்சி அலுவலகம் பின்புறம்<br>4. திரௌபதியம்மன் கோவில் தெரு<br>5. நாடார் தெரு<br>6. சாமியப்பா நகர்<br>7. தட்டாரத் தெரு<br>8. கீழத் தெரு<br>9. நெல்மிஷன் தெரு<br>10. மன்னை சாலை<br>11. அபிஷேகக் கட்டளை<br>12. பெரியநாயகிபுரம்.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** மேற்காணும் விவரப்படி பணியினை 12 இடங்களில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | 175 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **2.** பொது நிதியிலிருந்து ரூ.1.00இலட்சம் ஒதுக்கீடு செய்து இப்பணியினை செய்ய மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.1071/2022,இ1 | | |

ஒம்/ பா.கவிதா,
தலைவர்,
00திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/